**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.58/2014**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | : | **P.W.12** |
| **Name** | : | திரு.கே.செல்வராஜ் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

எதிரி ஆஜர். சாட்சி காணொளி மூலம் விசாரிப்பதற்கான முன்நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்படி காணொளி மூலம் சாட்சி ஆஜராகி காணொளி மூலம் திறந்தவெளி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்று பாளையம்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக 5.6.2012 அன்று பணியில் இருந்தபோது, செய்யார் நீதித்துறை நடுவர் அவர்கள் கொடுத்த வேண்டுகோளை பெற்று பெரணமல்லூர் காவல்நிலைய குற்ற எண். 232/2012 என்ற வழக்கில் இறந்துபோன மதன்குமார், வயது 4 என்பவரின் பிரேதத்தை ஆரணி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை எண்.35/2012 (நாள் 27.4.2012) பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட நாவடி எலும்பு என்னிடம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. எங்கள் துறை நாவடி எலும்பு அறிக்கை எண்.90/2012 என இலக்கமிட்டு 5.6.2012 அன்று பரிசோதனை செய்தேன். நாவடி எலும்பை சுற்றி உள்ள திசுக்களில் ரத்த குழாய்கள்

எல்லாம் உடைந்து ரத்த கசிவு இருந்ததை கண்டறிந்தேன். இது பெரும்பாலும் கழுத்தை நெரிப்பதால் ஏற்படக்கூடிய நிகழ்வாகும் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய அறிக்கை (கடிதம்) என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.9. இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னுடைய அறிக்கையில் ரத்த கசிவின் நிறத்தை குறித்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நாவடி எலும்பை பிரேதத்தில் இருந்து எடுப்பதற்கு முன்பு பிரேதத்தை புகைப்படம் எடுக்கும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை. அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு நாவடி எலும்பை குறித்து ஆய்வு செய்வதற்கு போதிய அனுபவம் இல்லாததாலும் நாவடி எலும்பை ஆய்வு செய்வதற்கான உள்ளீடுகள் இல்லாததாலும் எங்களிடம் அனுப்பி வைக்கப்படுகிறது என்றால் சரி தான்.

மேற்கண்ட சாட்சியானது காணொளி மூலம் பதிவு செய்யப்பட்டதால் சாட்சியின் கையொப்பத்திற்காக மின்னஞ்சல் மூலம் சாட்சியின் கையொப்பம் பெற அனுப்பி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and both side counsels.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.

மேற்கண்ட சாட்சியத்தை நான் இன்று காணொளி மூலம் வழங்கினேன். நான் கொடுத்த சாட்சியத்தை மின்னஞ்சல் மூலம் பெற்றதை படித்து பார்த்து சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பமிடுகிறேன்.

**Sd/-.K.Selvaraj**
சாட்சியின் கையொப்பம்.